# மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்

எண்.135 செண்பக விநாயகர் கோவில் தெரு,
( Temple Tower)
பழைய பேருந்து நிலையம்,
தென்காசி -627811

விளம்பர எண்.1/ 2022 நாள்.13.10.2022

தென்காசி மாவட்டத்தில் கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக்கடைகளுக்கு விற்பனையாளர்கள் (Salesmen) பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து **http://www.drbtsi.in** என்ற இணையதளம் வழியாக Online மூலம் மட்டுமே 14.11.2022 அன்று பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | நேரடி நியமன பதவி விபரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | நியாயவிலைக் கடை விற்பனையாளர் (Salesman) | 1.தொகுப்பு ஊதியம் ரூ.6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை 2.ஓராண்டுக்கு பிறகு ஊதிய விகிதம் ரூ.8600-29000 | ஓ.1919 தென்காசி செங்கோட்டை தாலுகா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | 3 |
| | | | ஓ.941 தென்காசி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 4 |
| | | | இ.322 மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.629 பண்பொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1943 சாம்பவர் வடகரை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் | 2 |
| | | | ஓ.1968 தெ.பகவதிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.2142 இலத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | டிடி.18 கடையநல்லூர் பொது ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| | | | ஓ.400 திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | ஓ.1640 நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஓ.246 கடையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1731 ஆழ்வார்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | ஓ.2048 கீழாம்புர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | ஓ.2009 கோவிந்தப்பேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | ஓ.2000 கோவிலூற்று தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1141 சிவலார்குளம் கூட்டுறவு பண்டகசாலை | 2 |
| | | | ஓ.1921 சிவலார்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.549 நெட்டுர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1725 வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1697 ரெட்டைகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1972 ஊத்துமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | ஓ.2099 சுரண்டை சிவகுருநாதபுரம் கூட்டுறவு பண்டகசாலை | 5 |
| | | | ஓ.1976 கிடாரக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | ஓ.1931 மருக்காலங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1902 ஆலங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.575 புளியங்குடி வடக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திலி.தனி.219 புளியங்குடி கிழக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம | 1 |
| | | | திலி.தனி.138 வாசுதேவநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | திலி.தனி.139 வாசுதேவநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | திலி.தனி.136 தென்மலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஏ.66 சிந்தாமணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | திலி.தனி.148 ராயகிரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | திலி.தனி.119 சிவகிரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | திலி.தனி.125 விஸ்வநாதப்பேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.929 சங்கரன்கோவில் கூட்டுறவு பண்டகசாலை | 4 |
| | | | ஓ.965 சங்கரன்கோவில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | 6 |
| | | | திலி.தனி.110 ஆள்கொண்டார்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஏ.271 மடத்துப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | ஓ.1960 குருக்கள்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | திலி.தனி.102 சேர்ந்தமரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஓ.1717 சின்னக் கோவிலான்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1712 இராமநாதபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1110 திருவேங்கடம் கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| | | | திலி.தனி.120 குருவிகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | திலி.தனி.140 கலிங்கப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | ஓ.1077 கலிங்கப்பட்டி கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| | | | திலி.தனி.95 மைப்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஓ.1637 அழகனேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | திலி.தனி.38 பனவடலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | **மொத்த காலிப் பணியிடங்கள்** | **83** |

குறிப்பு மதிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் (Estimated Vacancy) எண்ணிக்கை தற்காலிகமானது (Tentative) மற்றும் மாற்றத்திற்குட்பட்டது.

1. **<u>நிபந்தனைகள்</u>**

   1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின்போது அரசுப்பணியாளர்கள் தேர்வுக்கு பின்பற்றப்படும் வகுப்பு சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொது GT | பிற்படுத் தப் பட்டோர் BC | பிற்படுத் தப் பட்டோர் (இஸ்லாமிய ர்) BC Muslim | மிகவும் பிற்படுத் தப் பட்டோர் / சீர்மரபி னர் MBC DNC | ஆதி திரா விடர் SC | ஆதி திராவிடர் அருந் ததியர் SCA | பழங்கு டி யினர் ST |
| விற்பனையாளர் | 83 | 25 | 21 | 3 | 17 | 13 | 3 | 1 |

2. நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

3. இத்தெரிவுக்கு நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு மற்றும் இனச்சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.

4. மேற்குறிப்பிட்ட காலிப்பணியிடங்களில் பெண்கள், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், தமிழ் வழியில் பயின்றோர், (PSTM) மாற்றுத்திறனாளிகள் போன்ற இனங்களின் கீழ் வரும் காலிப் பணியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டு விதிகள் நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி பின்பற்றப்படும்.

5. மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப்படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச்சங்கங்களின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்பு துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

6. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்மந்தப்பட்ட கூட்டுறவுச்சங்கங்களின் துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்றவேண்டும்.

7. **தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் தெரிவு முற்றிலும் தற்காலிகமானதே.**

8. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின், இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் உரிய காரணங்களுடன் மேல்முறையீடு செய்யப்படவேண்டும். அதற்குப்பின்னர் பெறப்படும் மேல்முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

**2. <u>உடற்தகுதிச்சான்றிதல்</u>**

தெரிவு செய்யப்படும் மாற்றுத்திறனாளிகள், தங்களது குறைபாடு தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக்குழுவிடம் பெற்று சமர்ப்பிக்கவேண்டும்.

### 3. <u>தகுதிகள்</u>

**அ. வயது (1.7.2022 அன்றுள்ளவாறு)**

விண்ணப்பதாரர்கள் 1.7.2022 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| i) | ஆதிதிராவிடர் ,அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பின், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) மற்றும் இவ்வகுப்புகளைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் | வயதுவரம்பு இல்லை |
| ii) | இதர வகுப்பினர் (OC) | 32 வயது |
| iii) | அனைத்து பிரிவிகளைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| iv) | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | 50 வயது |
| v) | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | 42 வயது |

**<u>ஆ.கல்வித்தகுதிகள்</u>**

விற்பனையாளர் - மேல்நிலை வகுப்பு (+2 தேர்ச்சி) அல்லது அதற்கு இணையான கல்வி தகுதி தேர்ச்சி

### <u>4.தமிழ் மொழித்திறன்</u>

விண்ணப்பதாரர் இந்த அறிவிப்பு வெளியிடும் நாளன்று தமிழ்மொழியில் எழுதப்படிக்க போதுமான திறன் பெற்றவராக இருக்கவேண்டும்.

### <u>5.தெரிவு முறை</u>

விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதியில் பெற்ற மதிப்பெண்களுக்கு அளித்த மதிப்பு மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பெண்கள் அடிப்படையிலும், விண்ணப்பதாரர் சார்ந்துள்ள வகுப்பு வாரியான இன சுழற்சி அடிப்படையிலும், தொடர்புடைய இதர அரசாணைகள் மற்றும் சட்டப் பிரிவுகளின் கீழ் வரும் முன்னுரிமைகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்பட்ட பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்படும்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்குக் கட்டாயமாக நேரில் வருகை புரியவேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத் தேர்விற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து உரிமை கோர இயலாது.

**6.காலிப்பணியிடங்களுக்கான தாங்கள் விருப்பம் தெரிவித்தல்**

விண்ணப்பதாரர்கள் தங்கள் எந்த நிறுவனத்தின் நியாயவிலைக்கடைக்கு பணியமர்த்தப்படவேண்டும் என்பதற்கான விருப்பத்தை நேர்முகத் தேர்வின்போது தெரிவிக்கவேண்டும். விண்ணப்பதாரர்களின் விருப்பத்தினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்கு பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது. இதற்காக தனியாக கலந்தாய்வு (Counselling ) ஏதும் நடைபெறாது.

**7.விண்ணப்பிக்கும் முறை**

அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பம் http://www.drbtsi.in என்ற இணையதளத்தில் ஆன் லைன் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்படவேண்டும். நேரிலோ அல்லது தபாலிலோ பெறப்படும் விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

அ. விண்ணப்ப படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. விண்ணப்பப் படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்படவேண்டும். (Upload)

| | |
|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் புகைப்படம் 50kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format) |
| 2 | விண்ணப்பதாரரின் கையெழுத்து 50kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format) |
| 3 | விண்ணப்பதாரரின் சாதிச்சான்றிதழ் 200kb அளவுக்கு மிகாமல் (Pdf file) |
| 4 | நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கான சான்றிதழ் 200kb அளவுக்கு மிகாமல் (Pdf file) |
| 5 | குடும்ப அட்டை 200kb அளவுக்கு மிகாமல் (Pdf file)<br>(அல்லது)<br>வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (Pdf file) |
| 6 | SBI Collect என்ற சேவையைப் பயன்படுத்தி Online மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்ப கட்டண இரசீது செலுத்தியிருப்பின் அந்த இரசீது (Pdf file)<br>(அல்லது)<br>திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் நேரடியாக செலுத்தியிருப்பின் (Candidates copy of the pay-in-slip) பதிவேற்றம் செய்யப்படவேண்டும் 100kb அளவுக்கு மிகாமல் (Pdf file) |

| | |
|---|---|
| 7 | மாற்றுத்திறனாளி எனில் அதற்கான சான்றிதழ் 200kb அளவுக்கு மிகாமல் (Pdf file) |
| 8 | ஆதரவற்ற விதவை எனில் அதற்கான சான்றிதழ் 200kb அளவுக்கு மிகாமல் (Pdf file) |
| 9 | முன்னாள் இராணுவத்தினர் எனில் அதற்கான சான்றிதழ் 200kb அளவுக்கு மிகாமல் (Pdf file) |
| 10 | ஏற்கனவே 2020ஆம் ஆண்டு விற்பனையாளர்கள் பணியிடத்திற்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் இந்த முறை விண்ணப்பிக்கும் போது கடந்த முறை அளித்த விண்ணப்பநகல் /வங்கி செலான் / நேர்முகத் தேர்விற்கு அனுப்பப்பட்ட அழைப்பு கடிதம் இவற்றில் ஏதேனும் ஒன்று 200kb அளவுக்கு மிகாமல் (Pdf file) |

இ ஆதரவற்ற விதவை என்பது அனைத்து வழிகளிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4000/-த்திற்கும் (ரூபாய் நான்காயிரம் ) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம் குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி /சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார்.

**8.விண்ணப்பக் கட்டணம்**

விற்பனையாளர் விண்ணப்பக் கட்டணம் ரூ.150 ஆகும்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கும் இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பகட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் சமூக நலத்துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவச்சான்றிதழும் பெற்றிருக்கவேண்டும். ஆதரவற்ற விதவைகள், மேலே (இ) இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உரிய அலுவலரிடமிருந்து சான்று பெற்றிருக்கவேண்டும்.

முன்னாள் இராணுவத்தினரைப் பொறுத்தவரை முதல் இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

ஏற்கனவே 2020ஆம் ஆண்டு விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் இந்த முறை விண்ணப்பிக்கும் போது கடந்த முறை அளித்த விண்ணப்பநகல் /வங்கி செலான் / நேர்முகத் தேர்விற்கு அனுப்பப்பட்ட அழைப்பு கடிதம் இவற்றில் ஏதேனும் ஒன்றினை ( 200kb அளவுக்கு மிகாமல் (Pdf file)) ஆன்லைனில் பதிவேற்றம் செய்யவேண்டும்.

**9.நேர்முகத்தேர்வு**

அ) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத்தேர்வு அந்தந்த மாவட்ட தலைநகரில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும். நேர்முகத்தேர்விற்கு அழைப்புக்கடிதம் பெற்ற விண்ணப்பதாரர்கள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் தங்கள் சொந்த செலவில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

ஆ) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படவுள்ள நபர்களின் பெயர்ப்பட்டியல் திருநெல்வேலி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

இ) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விபரங்கள் மின்னஞ்சல் (Email) குறுஞ்செய்தி (SMS) மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள் ,நேரம் ஆகிய விபரங்கள் அடங்கிய நேர்முகத்தேர்விற்கான அழைப்புக் கடிதங்களை விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளவேண்டும். அழைப்புக்கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஈ) நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியில் பெற்ற மதிப்பெண்களின் மதிப்பு (Weightage for academic marks ) மற்றும் நேர்முகத் தேர்வில் அளிக்கப்பட்ட சராசரி மதிப்பெண்கள் முறையே 50:50 என்ற விகிதத்தில் இருக்கும்.

முக்கிய குறிப்பு

**2020-2021ஆம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பில் மதிப்பெண் குறிப்பிடப்படாமல் ஒவ்வொரு பாடத்திற்கும் எதிராக மதிப்பெண் குறிப்பிடாமல் வெறும் PASS என்று குறிப்பிட்டு வழங்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் தாங்கள் படித்த பள்ளியில் 9ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழினை அந்தத் தலைமை ஆசிரியரின் சான்றொப்பம் பெற்று (மொத்த மதிப்பெண்கள், பெற்ற மதிப்பெண்கள்ஆகியவற்றை குறிப்பிட்டு) அதனை 10 ஆம் வகுப்பு PASS என்று வழங்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழுடன் பதிவேற்றம் செய்ய வேண்டும். இத்தகைய நேர்வுகளில் 9 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழினையும் இணைக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும். இத்தகைய நேர்வுகளில் 10 ஆம் வகுப்புக்கு பதிலாக விண்ணப்பதாரர்களின் 9ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே உரிய மதிப்பு வழங்கப்படும்.**

உ) நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகைபுரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும் இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகக் தேர்வில் கலந்துகொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**10.தடையில்லா சான்றிதழ்**

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்கவேண்டும்.

**11. இதர நிபந்தனைகள்**

அ) பத்தாம் வகுப்பு / +2 அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதி பெறாத நபர்கள் அதை விட அதிகமான கல்வித்தகுதி பெற்றிருந்தாலும் இத்தெரிவிற்கு தகுதி உடையவர்களாக கருதப்படமாட்டார்கள்.

ஆ) இத்தெரிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கு இணையான கல்வித் தகுதி உரிமை கோரும் நபர்கள் இத்தெரிவு அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்றோ அதற்கு முன்னரோ வெளியிடப்பட்ட உரிய அரசாணையின் நகலை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காவிட்டால் தனியரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

இ) நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் இரத்து செய்யப்படும்.

ஈ) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணிநியமனம் கோர உரிமை கிடையாது.

உ) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்ப பெறுவதற்கு / திருத்துவதற்கு /கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

ஊ) விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பாக இணையதளத்தில் உள்ள **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை (Instructions to the candidates)** பகுதியை கவனமாகப் படித்து தெரிவு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏ) விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி நிறுத்தப்படும்.

ஏ) விண்ணப்பிக்கும் முறை குறித்து எழும் சந்தேகங்களுக்கு விண்ணப்பதாரர்கள் Jrtsi.dr@gmail.com என்ற இமெயில் மூலம் தென்காசி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் மின்னஞ்சல் முகவரியில் அலுவலக வேலை நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.
உதவி மையம் தொடர்பு தொலைபேசி எண 04633 227088

ஐ) விண்ணப்பதாரர்கள் தெரிவுக்கு விண்ணப்பிப்பதற்காக செயல்படுத்தப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பத்தைப் பதிவேற்றம் செய்வதில் தாமதமோ அல்லது தொழில் நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.

மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

மாவட்ட ஆள்சேர்ப்பு மையத்தின் அலுவலர்கள், பிற அலுவலர்கள் அல்லது ஊழியர்களின் ஆதரவைப் பெற நேரடியாகவோ, கடிதத்தின் மூலமாகவோ, உறவினர், நண்பர், காப்பாளர், அலுவலர் அல்லது வேறொருவர் மூலமாகவோ செல்வாக்கை செலுத்த முயற்சி செய்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

| |
|---|
| ஆன் லைன் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 14.11.2022<br>நேரம் மாலை 5.45 மணி |

இணைப்பதிவாளர்/தலைவர்
மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,
தென்காசி